//அவசரம்// தனிக் கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1292 /ஆ1 /2022, நாள் : 27.04.2022

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு / அரசு உதவிபெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி – தலைமை ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு வகையான ஆசிரியர்களின் 09.03.2020–க்கு முன்னர் பெற்ற உயர்கல்வித் தகுதி ஊக்க ஊதிய உயர்வு – சார்பாக அரசுக்கு கூடுதல் விவரங்கள் அனுப்பக் கோருதல் – சார்பாக.

பார்வை :
1. சென்னை– 6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.069381/கே/இ1/2018. நாள்: 20.02.2021 மற்றும் 26.04.2022.
2. அரசுக் கடிதம் எண். 6192/பக5(2)2021–2, நாள்.07.04.2022.

#######

பார்வை 2–ல் காணும் அரசு கடிதத்தில் கோரியுள்ள விவரங்களை அரசுக்கு அனுப்ப ஏதுவாக ஊக்க ஊதிய உயர்வு சார்ந்து ஏற்கெனவே கருத்துரு அனுப்பப்பட்டவர்களின் விவரங்களை மட்டும் வேலூர் வருவாய் மாவட்ட அளவில் ஆசிரியர்கள் வகிக்கும் பதவி வாரியாக பிரித்து தனித்தனியாக இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட உரிய படிவத்தில் பூர்த்தி செய்து 30.04.2022 அன்று மாலைக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு / அரசு உதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இது சார்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:- படிவம்-1.

(ஓம்.க.முனுசாமி)XXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

27/04/22

பெறுநர் :
அனைத்து அரசு / அரசு உதவி பெறும் உயர் / மேல்நிலைப் –
பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்–
மாவட்ட கல்வி அலுவலர்
வேலூர்.
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)

//ப.த.//

# படிவம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருவாய் மாவட்டம் | மனுதாரரின் பெயர் | பணியின் பெயர் | பணிபுரியும் பள்ளியின் பெயர் | ஊக்க ஊதியம் கோரும் பதவியில் பணியமர்வு செய்யப்பட்ட நாள். | ஊக்க ஊதியம் உயர்வு கோரும் ஆசிரியர் துறையின் முன் அனுமதி பெற்றுள்ளாரா ஆம்/இல்லை | ஆம் எனில் துறை அனுமதி வழங்கப்பட்ட எண்ணும் நாளும் | உயர்கல்வி தேர்ச்சி பெற்ற விவரம்(கல்விச் சான்றுகளின் நகல்கள்) ஆம்/இல்லை | உயர்கல்வி தேர்ச்சி பெற்ற விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பணிப்பதிவேட்டின் பக்கங்களின் நகல் ஆம்/இல்லை | உயர்கல்வி தேர்ச்சி பெற்றமைக்கான ஊக்க ஊதிய உயர்வு வழங்க வேண்டிய ஆசிரியர்களால் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல்கள். | ஏற்கனவே உயர்கல்வி தேர்ச்சி பெற்றமைக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருப்பின் அதன் விவரம் | 10.03.2020க்கு முன்னர் உயர்கல்வித் தகுதி முடித்து ஆசிரியராக பணியமர்வு செய்யப்பட்டவர்கள் பள்ளிக் கல்வித் துறையால் வெளிடப்பட்ட எந்த அரசாணையின்படி ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதியுடையவர் என்பதனை குறிப்பிட வேண்டும். |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

முதன்மைக் கல்வி அலுவலர்